ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| மாநில திட்ட இயக்குநர், | முதன்மைக் கல்வி அலுவலர், |
| ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, |
| சென்னை – 6. | அனைத்து மாவட்டங்கள். |

ந.க.எண். 1587/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2023 நாள்: 26.07.2023

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2023–24ஆம் ஆண்டில் 6–18 வயதுடைய பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகளை (மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) கண்டறிவதற்கான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்பு.

*****

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் 100% மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் முக்கியமான உட்கூறுகளில் ஒன்று பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சி தலையீடுகள் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளைக் கண்டறிய சிறப்புக் கணக்கெடுப்பு பணி நடத்தப்படுகிறது. இதில் கண்டறியப்படும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் சிறப்புப் பயிற்சி மையங்கள் மூலம் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர் பணியாகும்.

6–18 வயதுடைய பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனுடைய குழந்தைகளைக் கண்டறியும் கணக்கெடுப்பு பணி மேம்படுத்தப்பட்ட கைப்பேசி செயலியை பயன்படுத்தி கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்திட வேண்டும்.

இப்பணியினை சூழலுக்கேற்ப அனைத்து மாவட்டங்களிலுள்ள ஆசிரியப் பயிற்றுநர்கள்/ பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்கள்/ அங்கன்வாடி பணியாளர்கள்/ கல்வி தன்னார்வலர்கள்/ சிறப்புப் பயிற்றுநர்கள்/ இயன்முறைப் பயிற்சியாளர்கள் (Physiotherapist)/ சிறப்பு பயிற்சி மையப் பாதுகாவலர்கள்/ பள்ளி

அலுவலர்களிடம் தேவைப்படும் உதவிகளை தெரிவித்து பிற துறை அலுவலர்கள் இணைந்து ஆய்வு செய்ய வேண்டிய பகுதிகள் மற்றும் ஆய்வு நடக்கும் நாட்களை இறுதி செய்ய வேண்டும்.

- இரண்டாவது கட்டமாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் "முன் திட்டமிடல் கூட்டம்" (Pre-planning meeting for survey) நடத்த வேண்டும். இக்கூட்டத்திற்கு மாவட்டக் கல்வி அலுவலர் (DEO), மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (IE, OoSC, EMIS & MDO) மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்கள் (Labour, DISH (Directorate of Industrial Safety & Health), Child Line, ICDS, DCPO, DRDA, Police Department, Health and Welfare Departments, NGO மற்றும் DDAWO அலுவலர்) என துறைக்கு ஒருவர் வீதம் இக்கூட்டத்தில் பங்கேற்க செய்து கணக்கெடுப்பு நடத்துவதன் நோக்கம், கண்டறியப்பட்டவுடன் சேர்க்கை / சிறப்பு பயிற்சி செயல்பாடுகள், பிறதுறை அலுவலர்கள் இணைந்து ஆய்வு செய்ய வேண்டிய பகுதிகள் ஆகியன குறித்து விவாதிக்க வேண்டும்.

- மூன்றாவது கட்டமாக முதன்மைக் கல்வி அலுவலர் / உதவித் திட்ட அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர்கள் தலைமையில் ஒன்றிய மேற்பார்வையாளர், ஒன்றிய ஆசிரியர் பயிற்றுநர்கள் (பள்ளி செல்லா குழந்தைகள், உள்ளடக்கிய கல்வி மற்றும் MDO), வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஆகியோரை பங்கேற்க செய்து கூட்டம் நடத்துதல் வேண்டும். இதில் பொது தரவு தளத்திலுள்ள அனைத்து மாணவர்களும் விடுபடாமல் களப்பணியாளர்களுக்கு சமமாக பங்கிட்டு அளித்தல் மற்றும் கணக்கெடுப்பு விவரங்களை கணக்கெடுப்பு செயலியில் (Survey app) பதிவு செய்தல் ஆகியன குறித்து விளக்குதல் வேண்டும். கணக்கெடுப்பில் ஈடுபடும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், தொண்டு நிறுவன தன்னார்வலர்கள் மற்றும் இதர கள பணியாளர்கள் இணைந்து குழுக்கள் அமைத்து, கணக்கிடுதல் பணி துல்லியமாக நடைபெறுதலை உறுதிசெய்தல் வேண்டும்.

- நான்காவது கட்டமாக ஒன்றிய அளவில் மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு) மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் தலைமையில் ஒன்றிய ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமையாசிரியர்கள், கிராமப்புற செவிலியர்கள் (Village Health Nurse), சிறப்பு பயிற்றுநர்கள் (Special Educators), அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கல்வி தன்னார்வலர்கள் (Education Volunteers) கூட்டம் நடத்தி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு சமமாக பகிர்ந்தளித்தல் வேண்டும். கணக்கெடுப்பு விவரங்களை கணக்கெடுப்பு செயலியில் (Survey app) பதிவு செய்தல் ஆகியன குறித்து விளக்குதல் வேண்டும்.

❖ ஐந்தாவது கட்டமாக பள்ளி அளவில் தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழு (SMC) உறுப்பினர்களுடன் அப்பள்ளியின் அனைத்து ஆசிரியர்களையும் சேர்த்து கூட்டம் நடத்தி அப்பள்ளி சார்ந்த அனைத்து மாணவர்களுக்கும் கணக்கெடுப்பு நடைபெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு – கூடுதல் தெளிவுரைகள்:

❖ மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு கணக்கெடுப்பு நடத்தும் பொழுது சிறப்பு பயிற்றுநர்களும் இருத்தல் அவசியம். மாற்றுத்திறனுடைய குழந்தைகள் அல்லாத பிற குழந்தைகளுக்கான கணக்கெடுப்பில் அவர்களை ஈடுபடுத்துவதை தவிர்த்தல் வேண்டும்.

❖ மேலும், மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சி தலையீடுகளில் இரு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் (IE & OoSC) ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

❖ கட்டுமானப் பணிகள், செங்கல் சூளை, அரிசி ஆலை, கல்–குவாரி, மணல்–குவாரி, தொழிற்சாலைகள் மற்றும் விவசாயம் போன்றவற்றில் பணிபுரிய பல்வேறு மாநிலங்களிலிருந்து/ மாவட்டத்திலிருந்து (Inter and Intra State) தொழில் நிமித்தமாக தமிழகத்திற்கு வருகின்றனர். குறிப்பாக தொழிற்சாலை, மார்க்கெட் பகுதிகளில், கணக்கெடுப்பு நடத்தும்போது குழந்தை தொழிலாளர் நலத்துறை (Labour Department), DISH (Directorate of Industrial Safety and Health), Child Line, மாவட்ட குழந்தை பாதுகாப்பு துறை (Social Defence) அலுவலர் மற்றும் காவல் துறையுடன் இணைந்து ஆய்வு நடத்திட வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பின் பொழுது கண்டறியப்பட்ட குழந்தைகளின் விவரங்களை கீழ்கண்ட அட்டவணையில் பூர்த்தி செய்து மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்ப வேண்டும்.

**District Name:**

| Date of Joint Inspection conducted | Areas where joint inspection undertaken (Just mention Industrial areas / quarries / brick kilns / hotels / Markets, etc) | Mention the department involved in Joint inspection | Number of joint inspections undertaken (During 2022-23) | No of children identified / Rescued | No. of children enrolled in schools (Direct Enrolment) | No. of children enrolled in special training centres |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

(கடைசி இரண்டு கலங்கள் பள்ளிகளில் / சிறப்பு பயிற்சி மையங்களில் சேர்ந்த பின்பு பூர்த்தி செய்ய வேண்டும்)

- பெருநகரங்களில் கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ளும் போது மாநகர ஆணையரின் ஆலோசனையுடன் குழந்தைகள் நலனுக்காக சிறப்பாகச் செயல்படும் தொண்டு நிறுவனங்கள்/ சுய உதவி குழுக்களைக் கணக்கெடுப்பில் ஈடுபடுத்தி எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும். (மிக முக்கியம்)

- இக்கணக்கெடுப்பில் குறிப்பாக இரயில் நிலையம், பேருந்து நிலையம், உணவகங்கள், பழம், பூ மற்றும் காய்கறி அங்காடி மற்றும் குடிசை பகுதிகள் (Slums), கடலோர மாவட்டங்களிலுள்ள கரையோர பகுதிகளில் (Coastal areas) வாழும் மீனவ குடியிருப்பு பகுதிகள், விழாக்கள் நடைபெறும் பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

கணக்கெடுப்பு பணி குறித்த செயல்திட்டம்:

1. I Spell – முதன்மைக் கல்வி அலுவலர்/ உதவித் திட்ட அலுவலர் (APO) தலைமையில் கணக்கெடுப்பு குறித்து கலந்தாலோசனை கூட்டம் நடத்துதல் வேண்டும்.

2. II Spell – மாவட்ட ஆட்சியர்/ முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் கலந்தாலோசனை கூட்டம் நடத்துதல் வேண்டும்.

3. III Spell – மாணவர்களை பங்கீடு செய்தல் – மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்/ உதவித் திட்ட அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர்கள் (DEO) கலந்தாலோசனை கூட்டம் நடத்துதல் வேண்டும்.

4. IV Spell – ஒன்றிய அல்லது வட்டார அளவில் வட்டாரக் கல்வி அலுவலர் (BEO)/ மேற்பார்வையாளர் தலைமையில் கலந்தாலோசனை கூட்டம் நடத்துதல் வேண்டும்.

5. V Spell – அடுத்து வரும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் கணக்கெடுப்பு நடத்துதல் வேண்டும்.

6. ஊடகங்களில் கணக்கெடுப்பு குறித்துக் கட்டாயம் விளம்பரப்படுத்துதல் வேண்டும். உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள், FM ரேடியோ, திரையரங்குகளில் விளம்பரம், பத்திரிக்கைகளில் செய்தி போன்றவை மூலமாக

விளம்பரம் செய்ய வேண்டும். மேலும், கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக தெருக்களில் இடைநின்ற குழந்தைகளுக்கு அரசு வழங்கும் சலுகைகளைப் பற்றி அறிவிப்பு செய்ய வேண்டும். அப்பகுதியில் பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் இருந்தால் உடனடியாக பள்ளிகளில் சேர்க்க வலியுறுத்த வேண்டும்.

7. ஊராட்சி அலுவலக அறிவிப்புப் பலகை மற்றும் நியாய விலைக் கடைகளில் இது சார்ந்து விளம்பரம் செய்ய வேண்டும். பெருநகராட்சிகளில் சம்பந்தப்பட்ட ஆணையர்கள் / மண்டல அலுவலர்கள் மூலமாக பொது மக்களுக்கு அறிவிப்பு வழங்கும்படி தெரிவிக்கலாம்.

8. மேற்குறிப்பிட்ட அனைத்துச் செயல்பாடுகளையும் முடித்த பிறகு கணக்கெடுப்பு தொடங்குதல் வேண்டும். இதற்காக உருவாக்கப்பட்ட செயலி (Survey App) மூலம் இப்பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

9. கணக்கெடுப்பின் போது கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த மாணாக்கர்களின் விவரங்களையும் சேகரிக்க வேண்டும்.

10. கணக்கெடுப்பு சார்ந்த அனைத்து செயல்பாடுகளையும் முறையாக ஆவணப்படுத்த வேண்டும்.

11. கண்டறியப்படும் பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள்/ மாற்றுத் திறனுடைய குழந்தைகள் உடனடியாக பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும்.

12. சிறப்பு பயிற்சி தேவைப்படும் குழந்தைகளை இணைப்பு சிறப்புப் பயிற்சி மையங்களில் (RSTC/ NRSTC/ IE NRSTC/ KGBV/ NSCBAV) சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13. பள்ளிகளில் சேர்க்கப்பட்டவுடன் EMIS–இல் மாணாக்கர்களின் விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

14. **கணக்கெடுப்பு களப்பணி – 01.08.2023 முதல் நடைபெற வேண்டும்.**

இக்கணக்கெடுப்பின் தரவுகளை மூன்றடுக்கு குழுக்களின் அனைத்து நிலைக் கூட்டங்களிலும் கண்காணித்து, கலந்தாலோசித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

2023–24ஆம் ஆண்டில் நடைபெறக்கூடிய கணக்கெடுப்பு பணியின் போது சிறப்புக் கவனம் செலுத்தி, தங்கள் மாவட்டத்தில் பள்ளிக்கு செல்லாத பெண் குழந்தைகள்/ மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த குழந்தைகள் யாரேனும் கண்டறியப்பட்டால், உடனடியாக அக்குழந்தைகளை கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ன்படி வயதுக்கேற்ற வகுப்பில் அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர்க்க வேண்டும்.

ஆவணப்படுத்துதல்:

கணக்கெடுப்பு சார்ந்த புகைப்படங்களை jpg file ஆக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு கொடுக்கும் போது புகைப்படத்திற்கு கீழே எங்கே எடுக்கப்பட்டது (photos with caption) விவரத்துடன் அனுப்புதல் வேண்டும். இப்பணிக்கு மாவட்ட தகவல் மற்றும் ஆவணப்படுத்தும் (MDO) ஒருங்கிணைப்பாளர்களை கொண்டு புகைப்படம் எடுத் இவ்வியக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்கண்டவாறு கணக்கெடுப்பு பணியினை உரிய நாட்களில் நடத்தி முடித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

24/7/23

மாநில திட்ட இயக்குநருக்காக

MB 24/7/23

நகல்

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநரகம், சென்னை 6
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை 6